[1979 மார்ச் 26

*வினா எண் 531—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் 60 முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங் களைத் துவக்கிட அரசு ஆ வன செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) தமிழ்நாட்டில் குறிப்பாக 60 முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்களைத் துவக்கிட அரசுக்கு செயற் குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும் தமிழ்நாட்டில், ஏற்கனவே 60 உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்ட மையங்கள் மதுரை, செங்கல்பட்டு மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன் றிலும், வட ஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், கோயம் புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 90 மையங்களும் திறந்து நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு யூனியன்களிலும் ஆங்காங்கே உள்ள கட்சிக்காரர்கள் ஒவ்வொரு தலைவரைப் போட்டுக் கொண்டு அவர்களைக் கொண்டு இப்படிப்பட்ட முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங் கள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அவர் களே ஒவ்வொரு ஆசிரியரையும் நியமிக்கிறார்கள். இந்த நிலைமை அரசுக்குத் தெரியுமா என்பதைக் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, முதியோர் கல்வித் திட்டத்திற்கென்று தரப்படுகின்ற உதவி கட்சி அடிப்படையிலே தரப்படுவதில்லை. கட்சி அடிப்படையிலே இது செயல்படுத்தப்படுவதை இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, முதியோர் கல்வித் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு ஒதுக் கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் தமிழ்நாடு அரசு செல வழித்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்கஇயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்தில் மத்திய அரசு இங்கே இருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவர்களே நேரடியாக உதவியினைத் தந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது

REPORTING SECTION

1979 மார்ச் 26] [திரு. செ. அரங்கநாயகம்]

விண்ணப்பங்களை நம் மூலமாக பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஏறக்குறைய அவர்களேதான் நேரடியாகத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாநில அரசும் இந்தத் துறையிலே மத்திய அரசுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தந்து இதனைச் சிறப்பான முறையிலே நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.20.]

திரு. செ. மெ. ராஜு: தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ள காரணத்தால் முதியோர் கல்வித் திட்டத்தில் ஆசிரியர்களை மத்திய சர்க்கார் நேரடியாக நியமிக்கிறதா? அல்லது மாநில சர்க்கார் நியமிக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையின் மூலமாகவும் இந்த மையங்களை ஏற்படுத்துகிறோம், அத்துடன் என். எஸ். எஸ். திட்டத்தின் கீழ் மாணவர்களைக் கொண்டும் இந்தத் திட்டத்தை தொடங்கியிருக்கிறார்கள். இளைஞர் மையங்களும் இதில் பங்கு கொள்கின்றன. அது தவிர பல தொண்டு நிறுவனங்கள் (வாலண்டரி ஏஜென்ஸீஸ்) இவைகளும் பங்கு கொள்கின்றன. ஆசிரியர்களை நியமிக்கின்ற விஷயத்தில் அவரவர்கள் நியமித்துக் கொள்கிறார்கள். பொதுவாக அரசைப் பொறுத்தவரையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு பகுதி நேர ஆசிரியர்களைப் போல் பயன்படுத்திக்கொள்கிறது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, முதியோர் கல்வித்திட்டத்தை திறமையாக நடத்துவதற்கு கிராமப்புறங்களில் மாலை நேரத்தில் பள்ளிகளில் நடததுவதற்கு பள்ளிக் கூடங்களில் லைட்டுகள் போடப்படுமா? மேலும் கவர்ச்சிகரமான முறையில் இதை நடத்த ஒரு டீ கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, லைட்டுகள் போடுவது என்பது இப்போது தொ க்கப் பள்ளிகளை நாம் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அதற்கு ஏற்ப மின்சார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு லைட் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் டீ கொடுப்பது என்பது அது வேடிக்கையாக சொல்லப்பட்டாலும், நல்லதொரு யோசனை தான். இந்தத் திட்டத்தை நடத்துகின்ற இதில் சம்பந்தப்பட்டவர்கள் இதை பரிசீலிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசு தரப்பிலிருந்து நடத்தப்படுகின்ற மையங்களில் இப்போது அப்படி கொடுப்ப

தில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையின் அடிப்படையில் பலருடைய ஒத்துழைப்பைக் கொண்டு இது போன்ற கவர்ச்சிகரமான அளவுக்கு செய்து தருவார்களேயானால் இந்தத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு தருவதாகக் கருதி நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 532, 533 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

செங்கம் வட்டத்திலுள்ள நெல்லிக்குப்பம் ஏரி.

*வினா எண் 534—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைபாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் வட்டம் காரப்பட்டு மதுரா நெல்லிக் குப்பம் ஏரி கடந்த ஐந்தாண்டுகளாக தண்ணீர் நிரம்பாமல் இருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு கோறை ஆற்றில் இருந்து கால்வாய் வெட்டி தண்ணீர் திருப்பிவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கோரையாற்றிலிருந்து இந்த ஏரிக்கு ஒரு வரத்துக் கால்வாய் உள்ளது. இதனை மேம்படுத்தும் திட்டத்திற்கான ஆய்வு 1979-80-ல் எடுத்துக் கொள்ளப்படும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம்.

*வினா எண் 535—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் பரம்பிக்குளம்-ஆளியாறு புதிய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு சர்வே செய்வதற்காக அரசு எத்தனை லட்ச ரூபாய் செலவு செய்துள்ளது.